# நானும் என் எழுத்தும்



## மண்ணில் இப்பிறவியின் நோக்கத்தை நிறைவேற்ற நான் எழுதுகிறேன்

# நானும் என் எழுத்தும்

## (100 தகவல்கள்)

## மன்னார்குடி பானுகுமார்

### அணிந்துரை

எமது படைப்புகள் குறித்து அவ்வபோது வருகின்ற கடிதங்கள் என் எழுத்துக்கு உரமாக இருக்கின்றன வாசகர்களிடமிருந்து வரும் பாராட்டுகள் ஊக்கப்படுத்துவதாக அமைவதுண்டு.

அத்தி பூத்தாற்போல எப்போதாவது வரும் கடிதம்- படைப்பினை முழுதும் உள்வாங்கி அனுபவித்து மெய்சிலிர்த்து நன்றி சொல்லுவதும் உண்டு.

அப்படி வந்த ஒரு ஒரு வாசகரின் கடிதத்தினை இந்த நூலுக்கு அணிந்துரையாக அமைவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

என். சண்முகவேல்,

சார்ச் ரோடு, தெற்கு தெரு,

பாத்தப்பா ராமாபுரம்,

வேளாங்கண்ணி வழி 611 111

நாகப்பட்டிணம் மாவட்டம்.

நவம்பர் 29, 2021

மாண்பு நிறைந்த அய்யா அவர்களுக்கு,

பணிவான வணக்கம்.

அண்மையில் தாங்கள் எழுதிய "ஓய்வுக்குப் பிறகும் உற்சாக வாழ்க்கை" என்ற நூலை ஆழ்ந்து வாசித்தேன்.

ஒரு காலத்தை வென்று நிற்கும் அற்புதப் பெட்டகம், களஞ்சியம், பொக்கிஷம்.

நான் இதுவரை இதைப் போன்றதொரு அற்புத நூலை வாசித்ததில்லை.

ஒரே நூலில் முழு வாழ்க்கையையும் அடங்கச் செய்திருக்கிறீர்கள்.

நூலை ஆழ்ந்து வாசிக்கும் வாசகர்கள் பெறுவதற்கரிய மன அமைதியை, பேரின்பத்தை, மன நிறைவை, தெய்வீக வாழ்வை (Divine Life) வாழ்வார்கள். அத்தகைய பேறு பெற்றவர்களின் நானும் ஒருவன்.

தங்கள் நூல், சோர்ந்திருந்த உள்ளத்துக்கு மாமருந்தாக, புதிய உத்வேகத்தையும், மறுமலர்ச்சியையும் (genaissance) அளிக்க வல்லது.

நூல் முழுவதும் வாழ்க்கையை அர்த்தப்படுத்தி, வாழவைக்கும் வேதவாக்கியங்கள். அற்புதம். அருமை.

நூலை எழுதிய தங்களை எப்படி பாராட்டுவது? அறிவில் குறைந்த என்னால் முடிந்த செயலா?

தாங்களும், வாசகர்களும் வளம்பெற்று வாழ இறைவனை பிரார்த்திக்கிறேன்.

நூல் ஆசிரியரான தங்களுக்கும், கோயமுத்தூர் விஜயா பதிப்பகத்தாருக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"எல்லா உயிகளும் இன்புற்று வாழ்க"

அன்பு வாசகர்.

சண்முகவேல்

# நானும் என் எழுத்தும்

# (100 தகவல்கள்)

- எளிமை எனக்குப் பிடிக்கும். என்னைப் போலவே என் எழுத்துக்களுக்கும். மனித நேயத்தின் மீது என் எழுதுகோலுக்கு விருப்பம், அதைப் போலவே எனக்கும்.
- மனித நிழல்கள் இந்த மண்ணுக்குக் குடை பிடிக்கும் என்றல்லவா நினைத்தோம், ஆனால், இங்கே மனிதர்கள் தங்கள் நிழல்களாலேயே பூமியை இருட்டாக்கிக் கொண்டிருக்கிறார்களே. காலம் கடந்து விடவில்லை. வாருங்கள். நம்மைப் புதுப்பித்துக் கொண்டு நடப்போம்.
- எழுதுவது முழுக்க முழுக்க என்னுடைய வாசிப்பு, அனுபவம், மகான்களின் சொற்பொழிவுகளில் கேட்டது மற்றும் என் வாழ்க்கையிலிருந்து நான் பெறும் கல்வியின் விளைவும்.
- சிறுவயதில் இருந்து வாசிப்பதில் ஆர்வம். நான் படித்த மன்னார்குடி பின்லே பள்ளியில் மிகப் பெரிய நூலகம். இந்த பழக்கம் தான் என் எழுத்துக்களாக பிரசவிக்கின்றன.
- என் எழுத்துக்கு அடிநாதம் என் அன்னை, தந்தை, பாட்டி.
- பாட்டி சிறுவயதிலே ஆன்மீகக் கதைகளையும், பக்திப் பாடல்களையும் என்னுள். விதைத்தார்.




- பக்தி மார்க்கத்தில் வளர்ந்த எனக்கு ஞானப்பாதைக்கு சரியான பாதையை, ஆன்மீக அறிவியலை என்னுள் மலரச் செய்தவர் என் குருநாதர் வேதாத்திரி மகரிஷி. இதனால்தான் என்னுடைய படைப்புகளில் 80% ஆன்மீகமாகவே அமைந்துவிட்டது.
- என்னுடைய நாற்பதாவது வயதில்தான் என்னுடைய எழுத்துப் பணி தொடங்கியது. முதல் படைப்பும் இந்த வயதில்தான் வெளியானது.
- அரசுப் பணியில் பணியாற்றிய எனக்கு பயிற்சி கல்லூரிகளில் வகுப்பு எடுக்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த வகுப்புகளுக்கு பாடங்களுக்கு குறிப்பு எடுத்து அதன் நகலை பயிற்சி பெறுபவர்களுக்கு தருவது வழக்கம். அவ்வாறு ஒரு நகலைப் பெற்ற ஒரு பயிற்சியாளர், அதனை தொகுத்து புத்தகமாக அச்சிட்டு என்னிடம் தந்தார். (ஓய்வு கால வாழ்க்கை என்ற புத்தகம்). இதனை அரசு நூலகத்திற்கு வழங்கி அதன் பணப்பயனையும் பெற்றுத் தந்தார். இந்த தொடக்கப் புள்ளிதான் இன்று பல நூறு புத்தகங்கள் வெளி வருவதற்கு காரணமாக அமைந்தது.

- அரசுப் பணியில் இருந்ததால் - குமார் என்ற என் பெயரை பானுகுமார் என்ற புனைப்பெயரில் எழுத நேரிட்டது.
- அரசுப் பணிநேரம் போக எஞ்சிய நேரங்கள் எல்லாம் எழுத்துக்கள் தான் என் உயிர் மூச்சாக மாறியது. பணி ஓய்வு பெற்ற பின் முழு நேர எழுத்தாளராக மாறிவிட்டேன்.







- எழுத்தோடு தற்காலத்திற்கேற்ப யூடியூப் சேனலில் சிறு சிறு சொற்பொழிவுகளை vethathiriam banukukmar என்ற முகவரியில் பதிந்து வருகிறோம். இதுவரை 2000 க்கும் மேற்பட்ட உரைகளை அப்லோடு செய்துள்ளோம். ஆயிரக்கணக்கில் அன்பர்கள் கேட்டு மகிழ்வது எனக்கு ஊக்கம் தருவதாக அமைந்துள்ளது.
- வரலாற்றின் அனுபவங்களையும், வரலாற்றின் வெளிப்பாடுகளான நூல்களையும் உள்வாங்கி உள்வாங்கி ஒவ்வொரு தலைமுறையும் எழுதிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதுதான் சமுக அறிவியல். அப்படித்தான் பல தலை முறைகளின் அடுக்குகளில் இருந்து நாம் கற்கிறோம். நம் அடுக்கில் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு வேண்டியதை வைத்துவிட்டுப் போகிறோம்.

- இன்று வரை சுமார் 171 புத்தகங்கள் (31.12.2021) வெளிவந்துள்ளன. பல புத்தகங்களை சில பதிப்பாளர்கள் வெளியிட்டுள்ளனர். குறிப்பாக கோவை விஜயா பதிப்பகம் என்னுடைய எழுத்துக்களை உலகெங்கும் கொண்டு சென்று எனக்கு பரவலாக வாசகர்களைப் பெற்று தந்தது.
- இப்போதெல்லாம் என்னுடைய படைப்புகள் இணையதளத்தில் www.banukumar.in என்ற முகவரியில் வெளியிடப்படுகிறது. அன்பர்கள் அனைவரும் இலவசமாக டவுன்லோடு செய்து படித்து இன்பமுறுவதை நான் பெற்ற பாக்கியமாக எண்ணி மகிழ்ந்து வருகிறேன்.
- ஒரு யுக விழிப்பை ஆன்மீகத்தில் ஏற்படுத்துவதே எமது எழுத்தின் நோக்கமாக இருந்தது. அந்த முயற்சியில் வெற்றிகளும் வாய்த்து வருகின்றன.
- ஆயிரம் ஜாம்பவான்கள், கோடான கோடி புத்தக வரவுகள்.., கணக்கிலடங்கா தமிழ்த்தாயின் வார்ப்புகளுக்குமிடையே 'என்னையும் பானுகுமாரென எழுத்துப் போர் கொள்ள துணிவு தந்தது **என் எழுத்து**.
- நான் எப்போதும் விழிப்புணர்வின் பக்கமே நின்று எழுதுகிறேன். எல்லாத் தருணங்களிலும், எல்லாவற்றையும் குறித்துச் சிந்திப்பதுதான் எழுத்தாளனின், சிந்தனையாளனின் மூளைக்குரிய செயல்.






- இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழச்சிகள், புத்தரின் வாழ்வில் 100 சுவையான நிகழச்சிகள், "நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்" வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்" போன்ற படைப்புகள் வெற்றிகரமாக வாசகர்களை சென்றடைந்தது.
- நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல என் எழுத்துகளின் நோக்கமும் எதிர்கால சமூக நலனைக் குறிக்கோளாகக் கொண்டதாகும். அந்த அடிப்படையில்.
- வாழ்வில் எதையோ நிச்சயம் சாதித்தே தீருவோமென்று நம்பி நம்பியே ஒவ்வொரு அடியையும் எடுத்து வைத்த, எனக்குள்ளிருந்த, எழுத்தாளனை..ஆன்மீக படைப்பாளனை இந்த உலகத்திற்குக் காட்டிய வெளிச்சம் **என் எழுத்து**.





- ’ஒருவர் தனக்காக, காகிதத்தில், காலப்போக்கில், மற்றவர்களின் மனதில் ஒரு வீட்டை உருவாக்க எழுதுகிறார் என்பார்

ஆல்ஃபிரட் காசின், "தி செல்ப் அஸ் ஹிஸ்டரி. அதுபோல

மற்றவர்களின் மனதில் ஒரு வீட்டை என் எழுத்து உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

- என் எழுத்துக்களில் இருந்து உங்கள் மார்பிலிருந்து ஒரு பெரிய விஷயத்தைப் பெறுங்கள் – உணர்ச்சிகள், பதிவுகள், கருத்துக்கள். ஆர்வம் உங்களைத் தூண்டுகிறதை உணரலாம்.
- ‘துருப்பிடித்து அழிவதைவிட தேய்ந்து அழிவது மேல்’ என்பது என் இளம்பிராயத்தில் கோடுபோட்ட நோட்டுப்புத்தகத்தில் வண்ண மையால் நான் எழுதிய அறிஞர்களின் பொன் மொழிகளில் ஒன்றாகும். அந்த பொன்மொழியை இப்போதும் நான் அடிக்கடி நினைவுகூறுகிறேன் துருப்பிடித்து அழிய அல்ல... தேய்ந்து அழியுமாறு இயங்குகிறது எனது வாழ்க்கை.
- என் எழுத்துக்களும்.என்னையும் வாசகர்களையும் உற்சாகப்படுத்த முடியும். கவலைகளை மறக்கச் செய்யும். எப்போதும் மகிழ்ச்சியாக ஆனந்தமாக சுறுசுறுப்பாக இருக்கச் செய்யும்.




- கை வலிக்க எழுதிய காலம் போய், கணினியில் தட்டச்சு செய்வதை வழக்கமாக்கிக் கொண்டு விட்டோம். பேனா தொட்டு எழுதியது புராதனக் காலம் என்பது போல நினைக்கத் தொடங்கி விட்டோம். கடிதங்கள் காலாவதியாகி மின்னஞ்சல் மிடுக்காய் வலம் வருகிறது.
- "நான் எதையாவது கண்டுபிடிக்க விரும்புவதால் எழுதுகிறேன்.."
  என்பார் லாரல் ரிச்சர்ட்சன், *விளையாட்டின் புலங்கள்: என் எழுத்துக்களும் உங்களுக்குள் இருக்கும் புதையலை நீங்கள் கண்டுபிடிக்க உதவும்.*

- *ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை என்ற எமது புத்தகம் கோவை விஜயா பதிப்பகத்தால் வெளியிடப்பட்டு பல ஊடகங்களின் பாராட்டை இன்றளவும் பெற்று வருகிறது.*




- ஆழ்ந்தும், ஆய்ந்தும் நான் எழுதும் நேரங்களில் வாய் அகன்ற ஒரு பாத்திரத்திலிருந்து வாய் குறுகிய ஒரு பாத்திரத்தில் துளியளவும் சிந்தாமல் நீரை ஊற்றி நிரப்பி வெற்றிகண்ட உணர்வை நான் எனக்குள் பெறுகிறேன்.
- நல்ல எழுத்து எல்லா நேரங்களிலும் தாமதமாகவே உலகின் கண்களில் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறது.
- என்னை பார்க்கிறவர்களைவிடவும் முறைக்கிறவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் இன்னொரு தரப்பினரால் மிகவும் கூர்மையாக கவனிக்கப்பட்டேன்.

- *இன்றைய சமுதாய பிரச்சனைகளுக்கு எதிர்த்து போரிடுவதற்கு. ஒரு ஆன்மீக விழிப்புத் தேவைப்படுகிறது என்பதில், யாருக்கும் இரண்டாவது கருத்து இருக்க முடியாது. அந்த திசையில் தான் எமது எழுத்து பயணிக்கிறது.*
- நான் எழுதுகிறேன் கருத்தைச் சொல்லுவதற்காக அல்ல. கருத்தை செய்வதற்காக. ஒரு கனவைப் போல, நான் போயே தீர வேண்டிய அந்த போகக்கூடாத இடத்திலிருந்து தப்பிச் செல்லவே எழுதுகிறேன். நான் எழுதுகிறேன்.




- என்னைக் கூர்ந்து கவனிக்கும் தரப்பு தரும் ஊக்கமும், எதையும் எதிர்பாராமல் நாம் நினைத்ததை மட்டுமே எழுத வேண்டும் என்கின்ற என் பிடிவாதமும் என் எழுத்துப் பயணத்திற்கான முக்கியமான இரண்டு காரணங்களாக இருக்கின்றன.

- சமகாலச் சமூக வாழ்வின் துயரங்களை எழுதாமல், அவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் எவர் மனமும் புண்படாத, வெறுங்காற்றில் கத்தி வீசி வீரவசனம் பேசுவதைப் போன்ற எழுத்துகளை எழுத எனக்குக் கைவரவில்லை. அதன் விளைவாக ஒரு தரப்பினரால் நான் கண்டு கொள்ளாமல் விடப்பட்டேன்.
- வரலாற்று நூலாக "மன்னார்குடி வரலாறு", "மன்னார்குடி அரிய செய்திகள் 100" என்ற புத்தகங்களை ராஜம் பதிப்பகம் வெளியிட்டது.
- பயண இலக்கியங்களான "ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே" "அமெரிக்க மண்ணில் ஆறு மாதங்கள்", "சிம்லாவில் ஐந்து நாட்கள்" போன்ற படைப்புகளும் வாசகர்களின் வரவேற்பை பெற்ற நூல்களாகும்.



- நெருப்புப் பிழம்பிற்கு நடுவே நின்று உடல் கருகாமல் எரிந்துக் கொண்டிருக்கும் வேள்வியை போன்றது ஒரு எழுத்தாளன் இந்த சமூகத்தில் எழுதுகோல் பிடித்து நிற்பது.
- மானுடத்தின் உள்ளார்ந்த தேவைகளை என் எழுத்துக்கள் பூர்த்தி செய்யும்.
- என் எழுத்து, என் பேச்சு குறித்த எதிர் விமர்சனங்கள் எதுவும் என்னை எப்போதும் பாதிப்பதில்லை. சார்பு விமர்சனங்களும் பெரிதாக என்னை மகிழ்ச்சியில் மிதக்கச் செய்வதுமில்லை.




- தாம் படைக்கிற படைப்புகளைக் குறித்து எந்த இலக்கியவாதியும் பெரிதாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என்பதே என் அனுபவநிலை. பனை

ஒலைகளிலும் கற்சுவர்களிலும் இந்த உலகை உலுக்கியெடுக்கும் இலக்கியங்களை எழுதிவிட்டுப் போயிருக்கிறவர்களின் மரபில் தோன்றியிருக்கிற நாம், கணிப்பொறிகளை வைத்துக்கொண்டு அவர்களைத் தாண்டாமல் அலட்டிக்கொள்ளக் கூடாது. அவர்களைத் தாண்டினாலும் அலட்டிக் கொள்ளக் கூடாது என்பதில் நான் தெளிவாக இருக்கிறேன்.

- என் இருபத்தைந்து வயதில் எனக்கிருந்த ஒரே தோழன் விவேகானந்தர் மட்டுமே. அந்தரங்கமான வலிகளை, சந்தோஷத்தை, உலகின் மீதான கேள்விகளை அவரோடு மட்டுமே பகிர்ந்து கொள்ள முடிந்தது



- விவேகானந்தரின் சமூக மாற்றத்திற்கான செயல்முறை ஆன்மிகம், எனக்கு மிகவும் நெருக்கமானது. அத்தகைய ஆன்மிகத்தை என் எழுத்தின் வாயிலாக பெறுகிறேன். எனக்கான ஆன்மீக மனவிழிப்பை என் எழுத்தின் மூலமாகவே அனுபவிக்கிறேன்.
- 'ஒரு மனிதன் வாழ்ந்தான் என்பதற்கு, அவன் ஒரு குழந்தையாவது பெற்றிருக்க வேண்டும்; ஒரு வீடாவது கட்டி இருக்க வேண்டும்; ஒரு நூலாவது எழுதி இருக்க வேண்டும்' என்பார்கள். ஒரு நூல் என்ன பல நூல்களை என் எழுத்து உருவாக்கியிருக்கிறது.
- நம் உள்ளத்தில் படிந்துள்ள இறைவனின் தெய்வீக மூச்சுக் காற்றின் வெப்பமே என் எழுத்து.
- என் எழுதுகோல் சமூகத்தின் பக்கம் திரும்பிக் கடுகளவு கூட சமரசம் செய்து கொள்ளாமல், எவருடைய ரசனைக்கும் தீனிபோடாமல், எந்த முதலீட்டாளரையும் திருப்திபடுத்த வேண்டிய அவசியமில்லாமல், எந்த இசைக்கும் தலைவணங்காமல் எழுத ஆரம்பித்தது. என் எழுதுகோல் சமூகத்தின் சிக்கல்களையும் அவலங்களையும் எழுதியே வளர்ந்தது; வளர்கிறது.




- நான் விதைக்கும் என் சிந்தனைகளைச் சமூகம் அறுவடை செய்ய வேண்டும் என்பதே என் விருப்பமாகும்.
- பல ஒப்பாய்வு இலக்கியங்களை கோவை விஜயா பதிக்கம் வெளியிட்டது. கிழக்கும் மேற்கும், மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும், ஞானதீபமும் ஞான ஒளியும், ஞாலம் போற்றும் ஞானிகள், வேதாத்திரியத்தில் கலந்த நதிகள், வேதமுதல்வரும் வேதாத்திரி மகரிஷியும் போன்ற நூல்களை உலக புத்தக தினத்தில் வெளியிட்டு மகிழ்ந்தது இப்பதிப்பகம்.
- ”தாயுமானவரின் ஆனந்தகளிப்பு” என்ற எமது படைப்பினை சென்னை அழகுப் பதிப்பகம் வெளியிட்டது.

- எழுத்து எனும் வேளாண்மைத் தொழிலில் அறுவடை செய்கிறவர்கள், அதைப் விதைப்பவர்களாக இருக்க முடியாது. அப்படி இருக்கவும் கூடாது. நமது தமிழின் ஆதித் தோன்றலான திருவள்ளுவர் முதல் அண்மைச் சான்றாகத் திகழும் பாரதி வேதாத்திரி மகரிஷி வரைக்குமான நூற்றுக்கணக்கான இலக்கியர்கள் அப்படித்தான் விதைத்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் விதைத்தது நமது தலைமுறைகளுக்கு விளைந்து கொண்டே இருக்கிறது







- வள்ளுவரோடு, தாயுமானவரோடு, மாணிக்கவாசகரோடு, வள்ளலாரோடு, பாரதியாரோடு, வேதாத்திரி மகரிஷியோடு, சாக்கரட்டிஸ் முதல் காரல் மார்க்கஸ் வரை அவர்களை ஒத்த நூற்றுக் கணக்கானவர்களோடு இணைந்த சங்கமமாய் எமது எழுத்து துள்ளிப் பாய்கிறது. அதே நேரத்தில் ”பானுகுமார்” என்கிற தனித்துவத்தையும் தவறாமல் பயணிக்கிறது.
- மனத்தின் உல்லாச உலாவைப் போல படைப்பு இருப்பதை எம் எழுத்துக்களில் காணலாம்.
- துரு பிடித்த வார்த்தைகளைத் தூரத்தள்ளி, சுறுசுறுப்புச் சொற்களை எழுத்தில் பதிவது எமது வழக்கம். பழக்கம். எழுத்துக்கள் வீரியம் மிக்க சூரிய விதைகள்! இருளை வேறுக்கிற வெளிச்ச விழுதுகள்!
- என் எழுத்துப் பயணத்தின் போக்கில் என் எழுத்துகள் வெவ்வேறு பரிணாமங்களைப் பெற்று வெவ்வேறு தரப்பினருக்கானதாகவும், ஒட்டுமொத்தமாக சமூக நலனுக்கு உரியதாகவும் மாறியது.

- மாணிக்கவாசகரின் திருவாசகத்தையும் வேதாத்திரி மகரிஷியையும் ஒப்பாய்வு செய்து பல புத்தகங்களை இணைதளத்தில் வெளியிட்டு மகிழ்ந்தோம்.
- மொழிவளம், கற்பனை நயம், சமூகப் பார்வை, பிரக்ஞையுடன் கூடிய சீற்றம் எல்லாம் இணைந்து, இணக்கமாகி இருப்பதை எமது எழுத்துக்களில் காணலாம்.






- நான் பாமர மக்களின் எழுத்தாளனாக, உங்கள் தோள்களில் தோழமையோடு கைபோட்டுக்கொண்டு உலா வரவே விரும்புகிறேன். வாருங்கள் அன்பர்களே, நண்பர்களே, நாம் சேர்ந்து நடப்போம். நமது வியர்வையால் பூமியைக் கழுவிப் புதுப்பிப்போம்.
- நம் எழுத்தை நாம் எழுதிவிட்டுப் போவோம் என்கிற உறுதியான புரிதல் எனக்கு உண்டு. ஆனாலும் எனக்கு முன் எழுதப்பட்ட இலக்கியங்களிலும் என் சமகாலத்தில் எழுதப்படுகிற இலக்கியங்களிலும் அறியாமையோ, சமூக அறிவியலுக்குப் புறம்பான பார்வையோ பொதிந்திருக்குமானால் அதை விளக்கிச் சொல்லவும் விலக்கி வைக்கவும் முனையும் குரல்களில் என்னுடைய குரலும் ஒன்றாக இருக்கும்.
- உண்மையாக இருப்பதும், மேலும் மேலும் கூர்மையடைந்து கொண்டே இருப்பதுமான என் எழுத்துப் பயணமே என்

வாழ்வின், என் இலக்கியத்தின் பெருமைகளாக இருக்க முடியும்.

- இன்றைய நிலையில் என் எழுத்துகள் அச்சு ஊடகங்களின் வாயிலாக வாசகர்களைச் சென்றடைந்து அவர்களின் சிந்தனை மாற்றத்திற்கு வித்திடுவதற்கு முன்பாக உளவியல் ரீதியில் எனக்குச் செய்கிற நன்மைகள் எண்ணற்றவை.
- வாழையடி வாழையாக வந்த முன்னோடிகளை மதிக்கும் எமது எழுத்து, மக்களின் மூட நம்பிக்கைகளையும், மௌடிகப் பழக்க வழக்கங்களையும், போலிச் சாமியார்களையும், அரசியல் வாதிகளின் ஆதிக்கத்தையும், சுரண்டலையும் சாடி எதிர்ப்பதில் எமது எழுத்து சத்திய ஆவேசம் கொள்கிறது.
- எத்தகைய எழுத்தும் அப்போதைக்கு நம் அருகிலோ எதிரிலோ இருப்பவர்களுக்காக எழுதப்படுகிறது என்கிற நிலையைத்தாண்டி, எங்கேயோ எப்போதோ இருக்கப் போகிறவர்களுக்காகவும், படிக்கப் போகிறவர்களுக்காவும் எழுதப்படுகிறது என்கிற புரிதலோடும் எழுத வேண்டிருக்கிறது.




- என்னை உருவாக்கி வாழவைத்த சமுதாயத்திற்கு உடல் ஆற்றலையும் அறிவின் விளக்கங்களையும், அர்ப்பணித்து சமூகத் தொண்டு ஆற்ற வேண்டும். இதற்கு என் எழுத்தை தேர்ந்தெடுத்து எழுதி வருகிறேன்.

- தேடல்களுக்கு பின்னேயே வாழ்க்கை நகர்த்தும் எறும்பிற்கு தான், இன்னொரு எறும்பைத் தெரியும். நானும் அப்படியே என் வாழ்க்கையை தேடலாக நகர்த்தினாலும் என் தேடலை புரிந்துக் கொள்வோரின்றி தவிக்கையில், தவிப்புகள் கூட எழுத்துகளானது.
- அறிவு வறுமையைப் போக்குதற்றாக எழுத வேண்டும் என்பதே என் எழுத்தின் கோட்பாடு. அந்தக் கோட்பாடு நேற்று எனக்குள் இருந்தது. இன்று எனக்குள் இருக்கிறது. நாளையும் அது எனக்குள் இருக்கும்.
- என்னை வாழவைக்கும் இந்த மாபெரும் பிரஞ்சத்தையும், அதன் ஈடு இணையற்ற அழகுக் கோலத்தையும் மனிதர்கள் உள்ளிட்ட அதன் லட்சக்கணக்கான உயிரினங்களை நான் எல்லை கடந்து வெகுவாக நேசிப்பதாலும், அந்த நேசிப்பின் வெவ்வேறு வகை வெளிப்பாடுகளாக என் எழுத்தையே கொடையாக வழங்கவேண்டும் எனும் இயற்கையான எனது நல்லியல்பின் காரணமாகவும் நான் எழுதுகிறேன்.
- நான் ஏன் எழுதுகிறேன்?  எழுத்தின் மீது உள்ள காதலால் தமிழின் மீது உள்ள காதலால்....மானுடத்தின் மீது உள்ள காதலால்.






- ஒரு மரம் வளர ஓர் விதையாவது விதையுங்கள் என்பார்கள்.

விதைத்துவிட்டு செல்கிறேன். நான் இருக்கும் போது என்னைப் போற்றுமோ புகழுமோ எனக்குத் தெரியாது. ஆனால் என் மறைவின் பின் நிச்சயம் என் பெயர் சொல்லும். என் எழுத்துகள். நிச்சயம் சொல்லும் என்ற நம்பிக்கையில் நான் எழுதுகிறேன்.

- நான் எழுதுவதற்கு ஒரு உள்ளார்ந்த தேவை இருப்பதால் எழுதுகிறேன். நான் எழுதுகிறேன்.
- ஆற்று வெள்ளத்தில் நெடுந்தூரம் உருண்டு வரும் கரடுமுரடான கற்கள் பயணப்போக்கில் அழகான கூழாங்கற்களாக மாறுவதைப் போல என் படைப்புகள் மாறுவதை இப்போது என்னால் அனுபவப் பூர்வமாக உணரமுடிகிறது.
- எப்படியிருந்தாலும் பரவாயில்லை என்று நேற்று நான் பயன்படுத்திய ஆயுதங்களின் அழகும், வலிமையும் என்னையுமறியாமல் கூடியிருப்பதையே என் எழுத்துக்கள் எனக்களித்த கொடையாகக் கருதுகிறேன்.
- என் எழுத்து எனக்கு என்னத்தைக் கொடுத்தது..? நிறைய நல்ல நட்புகளைக் கொடுத்தது, என் எழுத்துக்கென நல்ல வாசகர்களைக் கொடுத்தது என்பதே உண்மை என்றாலும் அதையும் தாண்டி நீ வாசித்துப் பாரேன் என பகிரும் முன் நண்பர்கள் அனுப்பிய அவர்களின் எழுத்தைச் (சு)வாசிக்கக் கொடுத்தது...




- வள்ளுவரின் வாழ்வியல் நெறியும். தாயுமானவரின் ஆன்மீக நெறியும், மாணிக்கவாசகரின் சரணாகதி நெறியும், வள்ளலாரின் சன்மார்க்கமும், பாரதியின் மானுட நேசமும், வேதாத்திரியத்தில் மனவளக்கலையும் ஒன்றிணைந்து இழையோடிருப்பதே என் எழுத்து.
- என் எழுத்தில் யாருக்காகவும் சமரசம் செய்து கொள்ளமாட்டேன்... அது அதன் பாதையில்தான் பயணிக்கும்... அவரைப் போல எழுதலாமே என்பவர்களுக்கு அவரைப் போல எழுத அவர் இருக்கிறாரே பின் நான் எதற்கு...? எனக்கு தெரிந்ததை எழுதுவதே என் எழுத்து.
- என் எழுத்துக்களும்.என்னை உற்சாகப்படுத்த முடியும். என் கவலைகளை மறக்கச் செய்யும். என்னை எப்போதும் மகிழ்ச்சியாக ஆனந்தமாக சுறுசுறுப்பாக இருக்கச் செய்யும்.
- மண்ணில் இப்பிறப்பில் நோக்கத்தை நான் நிறைவேற்ற நான் எழுதுகிறேன்.

- விமர்சனங்களை ஏற்க மறுத்ததுமில்லை... உங்களிடம் சொல்வதெல்லாம் ஒன்றுதான்... எப்போதும் விமர்சனங்களை முகத்துக்கு முன் சொல்லக் கற்றுக் கொள்ளுங்கள்... அதன் மதிப்பு வீரியமானதாக இருக்கும். முதுகுக்குப் பின்னே அல்ல.

- நான் எழுதுவதை அனுபவிக்கிறேன் என்பதால் எழுதுகிறேன், என் வாயைத் திறக்கும்போது நான் செய்வதை விட அதிகமான சிந்தனையுடன் என்னைத் தூண்டுகிறது.






- என் எழுத்தை ஒரே ஒரு ஆன்மா நேசித்தாலே என் எழுத்தின் நோக்கம் வெற்றி அடைகிறது. மேலும் ஒரே ஒரு ஆத்மா புரிந்து உணரும் போது அது படும் ஆனந்தமே எனக்கு கிடைக்கும் மிக பெரிய பரிசாகும். இந்த நோக்கத்திற்காகவே நான் எழுதி வருகிறேன்.
- நான் சுயமாக சிந்தித்து தான் எதுவாக இருந்தாலும் எழுத முடியும். உயிரை உணர்ந்தால் மட்டுமே ஆன்மீகம் சுயமாக எழுத இயலும். எனவே என் அனுபவத்தை சிறிது கற்பனை கலந்து எனது படைப்புகளில் பொழுது போக்கிலும் பயன் அடைய எழுதுகிறேன்.
- சமுக நலன் என்பது தற்காலிகமான பயனே. ஆனால் மெய் அறிவு, பக்தி என்பது நிரந்திரமானது. எனவே நான் மக்களுக்கு நிரந்திரமாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற நோக்கில் எழுதுகிறேன்
- இந்தப் பூமிப் பெரும்பரப்பில் எங்கெங்கோ இருப்பவர்களோடு வெவ்வேறுபட்ட நேரங்களில் என்னைப் பகிர்ந்து கொள்ளவும், எழுதி எழுதிப் பிழை பார்த்து என் பிழைகளைச் சரி செய்து

கொண்டு மேம்படவும், வாசகனையும் சிந்தித்து தெளிய வேண்டும் என்பதுதான் எனது எழுத்தின் லட்சியம்.


- ”தாயுமானவரையும் வேதாத்திரி மகரிஷியையும்” பல்வேறு தலைப்புகளில் ஒப்பாய்வு செய்துள்ள பதினைத்து புத்தகங்களை இணையதளத்தில் wwwbanukumar.in இலவசமாகபடித்து மகிழலாம்.
- என் எழுத்தை அதிகம் பேர் வாசிக்க வேண்டும் என்பதற்காக வெறும் கற்பனை கதைகளை ஒரு போதும் எழுத போவதில்லை. அப்படி என்னால் எழுத முடியாது என்பது அல்ல என் பிரச்சனை. என் லட்சியம் நிரந்திரத்தை நோக்கியதாக மட்டுமே உள்ளது. ஆதலால் நான் முடிந்த வரைக்கும் என்னோடு பயணிக்க வைக்கவே என் எழுத்துக்கள் அமைய வேண்டும் என்பதற்க்காக நான் எழுதுகிறேன்.




- இதயத்தில் தொடங்கி இணையத்தில் முடிக்கிறேன் எழுத்தின் மேல் உள்ள தீரா காதலை... சிறுவயதில் புத்தகத்தின் மேல் கொண்ட காதல் இவ்வளவு தூரம் என்னை அழைத்து வந்திருக்கிறது..... புத்தகம் இருந்தால் உணவும், உறக்கமும் வேண்டாம். வள்ளுவனையும் தாயுமானவனையும், மாணிக்கவாசகரையும், வள்ளலாரையும், பாரதியையும், வேதாத்திரி மகரிஷியையும் அவர்களையொத்த நூற்றுக்கணக்கான மகான்களின் இலக்கியங்களையும் என் காலத்தில் நான் அறுவடை செய்து கொண்டிருக்கிறேன். என்

பேரனின் பேரனும் என்னைப் போலவே அவர்களை அறுவடை செய்து கொள்வான்.

- ஒற்றை விதையாக விழுந்து முளைத்தாலும் அறுவடை செய்யச் செய்ய நெடுவடிவமெடுத்துப் பரவி விளைந்து கொடுப்பது இலக்கியம் மட்டுமே.
- 'வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்" எனும் புத்தகத்தை கோவை விஜயாக பதிப்பம் வெளியிட்டு பல பதிப்புகளை அப்பதிப்பகமே மீண்டும் மீண்டும் வெளியிட்டது
- தன்முனைப்பு நூலான 'தன்னம்பிக்கை மலர்கள்' எனும் புத்தகம் கோவை விஜயா பதிப்பகம் மூலம்  வெளியானது. இதுவும் முதற் பதிப்பு விற்பனையாகி இரண்டாம் பதிப்பு வெளியிடப்பட்டது.




- அரேபியக் கவிஞன் ஒருவன் 'புத்தகம் என்பது உன் சட்டைப் பையில் இருக்கும் பூந்தோட்டம்' என்று உலகுக்குச் சொன்னான். இது நிஜம் என்பதை என் வாழ்க்கையில் கண்டு உணர்ந்து விட்டேன். நீங்களும் முயற்சியுங்கள்.
- திருவள்ளுவரும், தாயுமானவரும், மாணிக்கவாசகரும், வள்ளலாரும்  பாரதியாரும், வேதாத்திரி மகரிஷியும் இவர்களையொத்த நூற்றுக்கணக்கான நம் பழந்தமிழ்ப் படைப்பாளிகளும் நமக்கான தங்களது எழுத்தைத்தான் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்களே தவிர, நாம் எழுத

வேண்டியதையெல்லாம் எழுதி வைத்து விட்டுப் போகவில்லை எனும் புரிதலோடு நாம் எழுத வேண்டியிருக்கிறது.

- ஒரு இலக்கியத்தையோ அல்லது கட்டுரையையோ எழுதிமுடித்தவுடன் எனக்குள் ஒரு நிறைவு எங்கிருந்தோ வந்து நிறைகிறது. எழுதிக் கொண்டிருக்கும் தருணங்களே எனக்கு மிக மகிழ்ச்சியான தருணங்களாக இருக்கின்றன.
- அரசுப்பணியிலே இயல்பாக எனக்குள் எழுந்த எழுத்தாற்றலை எதன் பெருட்டேனும் தொலைத்து விட்டு, காலம் கடந்து தேடிக்கொண்டிருக்கக் கூடாது என்கிற தெளிவிலும், கண்களுக்கும் காதுகளுக்கும் ஏக காலத்தில் விருந்தளித்து கவனத்தை ஈர்க்கும்படியான எனது எழுத்தை அமைத்துக் கொண்டேன்.







- கண்களும் மூளையும் ஏக காலத்தில் இயங்கித் தெரிந்து கொள்ளவும், தெளிந்து கொள்ளவும், ஆரவாரமின்றி வழி வகுக்கும் எழுத்துக்கலையே எனக்கேற்ற கலை என்றுணர்ந்து ஏற்று ஈடுபாடு கொண்டமையால் எழுத்து என் வசமாயிற்று.
- இந்த சுறுக்கமான 100 தகவல்களில் நான் விவரித்திருக்கும் அனைத்துச் செய்திகளும் எதார்த்தமான உண்மைகளாக இருப்பதாலும், அவற்றுக்கான தீர்வுகளுக்கும் தெளிவுகளுக்கும் என்னளவில் என் எழுதுகோலின் வழியில் மற்றவர்களோடு

சேர்ந்து நான் மானுடத்தை மேம்படுத்தவும் உயர்த்தவும் பாடுபடவும் வேண்டி இருப்பதாலும் நான் எழுதுகிறேன்.

- எழுதாதபோது நான் மிகவும் சோர்ந்தும் கவலைப்பட்டுக் கொண்டும் இருப்பதாக என் மனைவி சொல்வாள்.
- என் படைப்புக்குள் என்ன சொல்லப்படுகிறது என்பது அல்ல முக்கியம். என்ன உணர்த்தப்படுகிறது என்பதுதான் முக்கியம்.
- என் எழுத்துக்கள் ஞானம் தேடும் பக்தர்களுக்கு சரியான பாதையை காட்டுகின்றன.
- என் எழுத்துக்கள் மனிதனை உருவாக்கின்றன. என் எழுத்துக்கள் மனிதர்களை உறக்கதில் இருந்து விழிப்படையச் செய்கின்றன.
- என்னுடைய ஒவ்வொரு படைப்பையும் ஒரு கட்டமைப்பைப் பின்பற்றுகிறது. **அறிமுகம், முடிச்சு மற்றும் விளைவு.** அதாவது, கதையின் ஆரம்பம், எழும் பிரச்சினை, அந்தப் பிரச்சினைக்கு தீர்வு. இது எளிதானது.







- எழுவதற்கு முன் படைப்பிற்குரிய தலைப்பினை நன்றாக விளங்கிக் கொள்ளவேண்டும். தலைப்பு வசீகரமாக இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருக்கின்றன எமது படைப்புகள்.

- ஒரு எழுத்தாளனுக்கு தேவை நான்கே நான்கு. பார்வை, ஞாபகம், பிரதிபலிப்பு, திட்டம். மற்ற எல்லாமும் இவற்றை செப்பனிடச் செய்யும் கருவிகள் தான். இந்த பாதையில் தான் என் எழுத்துக்கள் பயணித்துக் கொண்டிருக்கின்றன.
- எத்தனையோ வருடம் எழுதுகோல் தாங்கி, இதயங்களை உழுது பார்க்க, கொட்ட கொட்ட தூக்கம் தொலைத்து விழித்திருந்த.., புத்தகங்களை காகிதங்களாய் நிரப்பி – உலகின் தூரம் வரை கொண்டு செல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருந்த ஒரு சாமனியனை, தன் ஒரு சின்ன அரவணைப்பினால் உலகத்தின் முன்னே என்னையும் எடுத்துக் காட்டிய இறைநிலைக்கு என் நன்றி.
- கணிப்பொறியிலிருந்து மீளுமுன்னர், மறுபடி கை விரிக்கிறேன். பத்து விரல்களைப் பார்க்கிறேன். என் மூலதன விரல்கள்...வெளிச்ச விழுதுகளாய்,..இமயத்துக்கும் மேலான சிகரங்களாய்...இல்லையில்லை .... பத்து சூரியன்களகவே ஒளிர்கின்றன.

## துணைநின்ற நூல்கள்

1. நீங்களும் எழுதலாம் வாங்க
2. புத்தகம் எழுதலாம் வாங்க
3. நான் ஏன் எழுதுகிறேன்?
4. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க
5. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க.
6. இணையதள தகவல்கள்
7. பானுகுமார் படைப்புலகம்

# பானுகுமார் படைப்புலகம்

(171 புத்தகங்கள -31.12.2021 வரை)

PDF www.banukumar.in







## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
4. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்

5. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன் என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்

15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்
19. ஷேக்ஸ்பியரும் வேதாத்திரியமும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுமானவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?

28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

# பானுகுமார் படைப்புலகம்


1. நானும் என் எழுத்தும்
2. நீங்களும் எழுதலாம் வாங்க
3. புத்தகம் எழுதலாம் வாங்க
4. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க
5. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க
6. நான் ஏன் எழுதுகிறேன்

# கம்பனும் வேதாத்திரியமும்

1. கம்பனும் வேதாத்திரியமும் 1 (இலக்கிய திறனும் கருத்தியலும்)
2. கம்பனும் வேதாத்திரியமும் 2 (நாடும் அரசும்)
3. கம்பனும் வேதாத்திரியமும் 3 (இறை சிந்தனைகள்)
4. கம்பனும் வேதாத்திரியமும் 4. (மானுடம் வென்றதம்மா)



1. Vethathiriam banukum (Youtube channel)
2. Thayumanavar banukumar (Youtube channel)
3. Kumar vadivelu (Youtube channel)



# vethathiriam Banukumar

## (Youtube channel) Titles

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும் வேதாத்திரியமும்
8. ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்ப ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்

31. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33. புத்தக வெளியீடு
34. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38. வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43 .ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45 ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47. காலமெல்லாம் வேதாத்திரியம்
48. வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49. என்னைச் செதுக்கிய நூல்
50. தினசரி தியானம் சனவரி
51. தினசரி தியானம் பிப்ரவரி
52. தினசரி தியானம் மார்ச்
53. தினசரி தியானம் ஏப்ரல்
54. தினசரி தியானம் மே
55. தினசரி தியானம் ஜூன்
56. தினசரி தியானம் ஜூலை
57. தினசரி தியானம் ஆகஸ்டு
58. தினசரி தியானம் செப்டம்பர்
59. தினசரி தியானம் அக்டோபர்
60. தினசரி தியானம் நவம்பர்
61. தினசரி தியானம் டிசம்பர்
62. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4

66. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67. தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68. ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69. ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70. ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72. மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76. புலவர் தியாகராஜனார் பாகம் 1
77. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79. அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80. அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81. அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82. ஆன்மீகம் ஆன்மீகம்
83. டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84. டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85. டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86. தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87. சுயமுன்னேற்றம்
88. பத்திரகிரியார் சிந்தனைகள்
89. மன்னார்குடி
90. ஆராய்ச்சி - நன்மக்கட்பேறு
91. பொதுவானவை
92. மனைவிக்கு மரியாதை
93. திருமூலர் சிந்தனைகள்.
94. ஆண்டாள் சிந்தனைகள்
95. திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96. திருக்குறள் சிந்தனைகள்
97. அப்பர் சிந்தனைகள்
98. பட்டினத்தார் சிந்தனைகள்
99. பட்டினத்தார் ஒப்பாய்வு
100. சிவவாக்கியார் சிந்தனைகள்

101. ஔவையார் சிந்தனைகள்
102. சித்தர்கள் சிந்தனைகள்
103. திருமங்கையாழ்வார்
104. வள்ளலாரின் சிந்தனைகள்
105. பசி என்னும் பாவி
106. பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107. Retirement Speech
108. Audio speech part 1
109. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
113. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?
120. வேதாத்திரியம் மானுட வேதம்
121. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
122. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைகின்ற பொருள்
123. வேதாத்திரியப் பார்வையில் கருணாகரக் கடவுள்
124. மனவளக்கலையின் மகத்துவம்
125. அருட்தந்தையே நீ ஒரு அற்புதம்
126. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவர் காட்டும் ஆறு பகைவர்கள்
127. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
128. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாள் கண்ணி பாகம் 1
129. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
130. முதுமையிலும் உற்சாக வாழ்க்கை பாகம் 1

131. முதுமையிலும் உற்சாக வாழ்க்கை பாகம் 2

132. முதுமையிலும் உற்சாக வாழ்க்கை பாகம் 3

133. புலவர் தியாகராஜனார் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் பாகம் 2

134. புலவர் தியாகராஜனார் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் பாகம் 3

135. தாயுமானவரின் தத்துவங்கள்

136. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள் (வேதாத்திரியம் ஒப்பாய்வு 2)

137. பேரக்குழந்தைகளை மகிழ்வது எப்படி?

138. வேதாத்திரியப் பார்வையில் மனிதனும் மதமும் பாகம் 1

139. திருமந்திரமும் வேதாத்திரியமும்

140. நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

141. நானும் என் எழுத்தும்

143. நீங்களும் எழுதலாம் வாங்க

144. புத்தகம் எழுதலாம் வாங்க

145. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க

146. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க

147. நான் ஏன் எழுதுகிறேன்.

148. வாழ்க்கையை வெற்றி கொள்வது எப்படி? (வேதாத்திரியப் பார்வையில் 100 டிப்ஸ்)

149. மானுடம் சிறந்த வாழ்க்கை வாழ வேதாத்திரியத்தின் பத்து கட்டளைகள்

150. கம்பனும் வேதாத்திரியமும் (இலக்கியத் திறனும் கருத்தியலும்)


குரு அருள்
வாழ்க வளமுடன்
மிகச் சிறந்த
ஆன்மீக
சொற்பொழிவுகளுக்கு
யூடியூப்
சேனல் பெயர்
YouTube
VETHATHIRIAM BANUKUMAR
Subscribe
கண்டு பேரின்பம் அடைவோம்
சப்ஸ்கிரைப் செய்வோம்
பிறருக்கும் பகிர்வோம்